## குப்தப் பேரரசு [ கி.பி 320 தொடக்கம் 600 வரை ]

* குப்தர் கால வரலாற்றை எழுதுவதற்கு ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன.

[ எ - டு ] [1] இலக்கியம்

[2] பொறிப்புகள்

[3] நாணயங்கள்

* குப்த அரசர்களின் பரம்பரை குறித்து புராணங்கள் குறிப்பிடுகின்றன.

* குப்தர்களின் எழுச்சி பற்றி விசாகதத்தரின் ,

[1] தேவி சந்திரகுப்தம்

[2] முத்ராராட்சசம் ஆகிய இரண்டு நூல்களும் குறிப்பிடுகின்றன.

* இரண்டாம் சந்திர குப்தரின் ஆட்சி காலத்தில் இந்தியாவிற்கு வந்த சீனப்பயணி பாஹியான் விட்டுச் சென்ற குறிப்புகள் குப்த பேரரசின் சமூக , பொருளாதார , சமய நிலைகளை எடுத்துக் கூறுகிறது.

* குப்த அரசர்கள் வெளியிட்ட நாணயங்களில் உள்ள உருவங்களும் , சொற்றொடர்களும் குப்த மன்னர்களின் பட்டங்கள், அவர்கள் செய்த வேள்விகள் போன்ற விவரங்களைத் தருகின்றன.

Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : **www.tnpscexam.info**

## குப்த அரசர்கள் :

1. ஸ்ரீகுப்தர் -------> குப்த மரபைத் தோற்றுவித்தவர்.
2. கடோத்கஜர்
3. முதலாம் சந்திர குப்தர் [ 320 - 330 ]
4. சமுத்திர குப்தர் [ 330 - 380 ]
5. இரண்டாம் சந்திர குப்தர் [ 380 - 415 ] ---> [ பாஹியான் ]

6. **குமார குப்தர் [ 415 - 455 ]**
7. **ஸ்கந்த குப்தர் [ 456 - 468 ]**
8. **புரு குப்தர்**
9. **புத்த குப்தர்**
10. **பாலாதித்யர்**

### 1.ஸ்ரீகுப்தர் :

* ஸ்ரீகுப்தர் - குப்த மரபைத் தோற்றுவித்தவர். அடுத்து பதவிக்கு வந்தவர் கடோத்கஜர். இவர்கள் இருவரும் " மகாராஜா " என்று அழைக்கப்பட்டார்கள்.

### 2.கடோத்கஜர்

### 3.முதலாம் சந்திர குப்தர் [ 320 - 330 ]

* முதலாம் சந்திர குப்தர் " மகாராஜாதிராஜா " அல்லது " அரசர்களுக்கு அரசன் " என்று முதலில் அழைக்கப்பட்டார்.

* முதலாம் சந்திர குப்தர் லிச்சாவிகளுடன் மண உறவு கொண்டார். அக்குடும்பத்தைச் சார்ந்த " குமாரதேவி " என்ற இளவரசியை மணந்து கொண்டார்.

* மெஹ்ருளி இரும்புத்தூண் கல்வெட்டு முதலாம் சந்திர குப்தரின் பரவலான போர் வெற்றிகள் பற்றி குறிப்பிடுகிறது.

* 26 பிப்ரவரி 320 ஆம் ஆண்டு தொடங்கும் குப்த சகாப்தத்தை நிறுவியவர் - முதலாம் சந்திர குப்தர்.

**Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

### 4.சமுத்திர குப்தர் [ 330 - 380 ] :

* குப்த மரபிலேயே மிகச் சிறந்த அரசர் சமுத்திர குப்தர்.

* சமுத்திர குப்தர் ஆட்சி பற்றி அலகாபாத் கல்தூண் கல்வெட்டு குறிப்பிடுகிறது. அலகாபாத் கல்வெட்டு அசோகர் நிறுவிய கல்தூணில் நாகரி வரி வடிவத்தில் , வட மொழியில் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் 33 வரிகள் காணப்படுகின்றன.

* [1] சமுத்திர குப்தர் அரியணையேறிய சூழ்நிலை,

[2] வட இந்தியா மற்றும் தக்காணத்தில் அவர் மேற்கொண்ட படையெடுப்புகள் ,

[3] ஒரு கவிஞராகவும், அறிஞராகவும் அவரது சாதனை ஆகியவைகளை இக்கல்வெட்டு விளக்குகிறது.

* மேலும் அலகாபாத் கல்தூண் கல்வெட்டில் அவரது படையெடுப்பின் மூன்று நிலைகள் கூறப்பட்டுள்ளன.

[1] வட இந்திய ஆட்சியாளர்களுக்கு எதிராக போர் ,

[2] தென் இந்திய ஆட்சியாளர்களுக்கு எதிரான புகழ் மிக்க " தட்சிணபதா " படையெடுப்பு,

[3] வட இந்திய ஆட்சியாளருக்கு எதிரான இரண்டாவது படையெடுப்பு..

* வங்காளத்திலிருந்து சிந்து வரை, இமயமலையிலிருந்து விந்தியமலை வரை, சமுத்திர குப்தர் பேரரசு விரிவாக்கப்பட்டது.

* 9 வட இந்திய அரசுகளையும், 11 குடியரசு குழுக்களையும், 12 தென் இந்திய அரசுகளையும் போர்களில் இவர் வென்றதாக அலகாபாத் கல்வெட்டு குறிப்பிடுகிறது. அலகாபாத் கல்வெட்டை பொறித்தவர் , இவரது அமைச்சர் அரிசேனர்.

* சமுத்திர குப்தர் தமது முதலாவது படையெடுப்பில் அச்சுதன், நாகபாணன் ஆகிய இருவரையும் முறியடித்தார். அச்சுதன் பெரும்பாலும் ஒரு நாக மரபு அரசராக இருத்தல் வேண்டும்.

* நாகபாணன் மேலை கங்கை சமவெளிப் பகுதியை ஆட்சி புரிந்து வந்த " கோடா " குடும்பத்தைச் சார்ந்தவர். இவர்களின் அரசுகளை இணைத்துக் கொண்டார்.

* சமுத்திர குப்தர் தென் இந்தியாவின் மீது படையெடுத்து , 12 ஆட்சியாளர்களை முறியடித்தார்.

[1] கேரளாவின் மந்தராஜன்

[2] கோசல நாட்டு மகேந்திரன்

[3] கோட்டுராவைச் சார்ந்த சுவாமிதத்தன்

[4] காஞ்சியைச்  சார்ந்த விஷ்ணுகோபன்

[5] பலாக்காவின் உக்ரசேனன்

[6] பிஸ்தபுரத்து மகேந்திரகிரி

[7] அவமுத்த நாட்டு நீலராஜன்

[8] ரெண்டபள்ளாவின் தாமனன்

[9] மகா காந்தாரத்தின் வியாகராஜன்

[10] வெங்கி நாட்டு ஹஸ்திவர்மன்

[11] தேவராஷ்டிரத்து குபேரன்

[12] குஸ்தலபுரத்து தனஞ்செயன்

* தென் இந்தியாவைப்  பொறுத்தவரை சமுத்திர குப்தரின் கொள்கை வேறுபட்டிருந்தது. அவர் தென் இந்திய அரசுகளை இணைத்துக் கொள்ள வில்லை. மாறாக, தனது மேலாண்மையை ஏற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

* சமுத்திர குப்தரின் மூன்றாவது படையெடுப்பு எஞ்சியிருந்த வட இந்திய அரசர்களை முறியடிப்பது. 9 வட இந்திய அரசுகளை அழித்தார்.

1. [1]அச்சுதன், [2]. கணபதிநாகன்,  [3]. சந்திவர்மன்,  [4]. ருத்ர தேவன்

   [5] . மதிலன், [6]. பாலவர்மன்,  [7]. நந்தின்,  [8]. நாகசேனன்,

   [9]. நாகதத்தன்

- இவர்களில் பெரும்பாலோர் நாகர் குடும்பத்தை சார்ந்தவர்கள்.

* வரலாற்றின் ஏடுகளில் சமுத்திர குப்தரின் போர் வெற்றிகள் குறிப்பிட தகுந்தவையாகும்.

* எதிரிகளை சமுத்திர குப்தர் பெருந்தன்மையுடன் நடத்தியமை, அவரது கூரிய அறிவு, இசையில் மேதை, போன்றவற்றை அலகாபாத் கல்தூண் கல்வெட்டு கூறுகிறது.

* சமுத்திர குப்தர் பாடல்கள் இயற்றும் திறமை பெற்றிருந்ததால் " கவிராஜன் " என்று அழைக்கப்பட்டார், என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது.

* சமுத்திர குப்தரின் நாணயங்களில் வீணையுடன் அமர்ந்திருக்கும் காட்சி பொறிக்கப்பட்டுள்ளது. இசையில் அவருக்கு ஆர்வம் இருந்ததை இது விளக்குகிறது.

* சமுத்திர குப்தர் வடமொழியை ஆதரித்தார். அவர் ஒரு சிறந்த வைணவர்.

* புத்த சமயத்தின் மீது பற்று கொண்டிருந்த இவர், புத்த அறிஞரான வசுபந்து என்பவரை ஆதரித்தார்.

* இந்திய நெப்போலியன் என்று சமுத்திர குப்தர் அழைக்கப்படுகிறார்.

* சமுத்திர குப்தர் 8 வகை நாணயங்களை வெளியிட்டார்.

* சமுத்திர குப்தர் ஒரு சிறந்த கவிஞராகத் திகழ்ந்தார். " ஹரிசேனர் " உள்ளிட்ட பல அறிஞர்களை ஆதரித்தார்.

Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info

## 5.இரண்டாம் சந்திர குப்தர் [ 380 - 415 ] ---> [ பாஹியான் ]:

* சமுத்திர குப்தருக்குப் பின் அவருடைய மகன் இரண்டாம் சந்திர குப்தர் [ விக்ரமாதித்யர் ] ஆட்சிக்கு வந்தார். ஆனால் , வரலாற்று அறிஞர்கள் சமுத்திர குப்தருக்குப் பின் ராம குப்தர் ஆட்சிக்கு வந்ததாக கூறுகின்றனர். இதற்கு வலுவான சான்றுகள் இல்லை.

* இரண்டாம் சந்திர குப்தர் [ விக்ரமாதித்யர் ] திருமண உறவுகள் மூலம் தனது அரசியல் வலிமையை பெருக்கிக் கொண்டார்.

**[1] மத்திய இந்தியாவின் நாக இளவரசி குபேரநாகா என்பவரை இரண்டாம் சந்திர குப்தர் [ விக்ரமாதித்யர் ] மணந்து கொண்டார்.**

**[2] தனது மகள் பிரபாவதியை வாகாடக மரபு அரசன் இரண்டாம் ருத்ரசேனருக்கு மணமுடித்துக் கொடுத்தார்.**

*** தக்காணத்தில் புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் வாகாடகர்கள் ஆட்சி புரிந்தனர் , என்ற அடிப்படையில் இந்த மண உறவு அரசியல் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.**

**Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

**மேற்கு இந்தியாவை வெற்றி கொள்ளல் :**

*** மேற்கு இந்தியாவிலிருந்து சாக சத்திரப்புகளை எதிர்த்துப் போரிட்டு , பெற்ற வெற்றியே இரண்டாம் சந்திர குப்தரின் போர்த்துறை சாதனைகளில் மகத்தானதாகும்.**

*** சாக சத்திரப்பு மரபின் கடைசி ஆட்சியாளரான மூன்றாம் ருத்ரசிம்மன் இப்போரில் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டான்.**

*** மேற்கு மாளவம், கத்தியவார் தீபகற்பம், ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய ஆட்சிப் பகுதிகள் குப்தப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன.**

*** இந்த மகத்தான வெற்றிக்குப் பிறகு இரண்டாம் சந்திர குப்தர் " அசுவமேதயாகம் " நடத்தியதோடு, சாகர்களை அழித்தவர் என்ற பொருள் கொண்ட " சாகரி " என்ற விருதுப் பெயரையும் சூட்டிக் கொண்டார். தம்மை " விக்ரமாதித்தன் " என்றும் புகழ்படக் கூறிக் கொண்டார்.**

*** குப்த அரசர்களில் இரண்டாம் சந்திர குப்தர் முதன் முதலாக வெள்ளி நாணயங்களை மேற்கத்திய சாக சத்ரப்பாக்கள் அரசர்கள் பாணியில் வெளியிட்டார்.**

*** மேற்கு இந்தியாவை வெற்றி கொண்டதின் விளைவாக பேரரசின் மேற்கு எல்லை அரேபியக் கடல் வரை நீண்டது. இதனால் புரோச், சோபரா, காம்பே உள்ளிட்ட துறைமுகங்கள் குப்தப் பேரரசின் எல்லைக்குள் வந்தன.**

*** உஜ்ஜயினி முக்கிய வணிகத்தளம் மற்றும் குப்தர்களின் மாற்றுத் தலைநகராகவும் விளங்கியது.**

* இந்தியப் பொருட்களை வாங்குவதற்காக மேற்கத்திய வணிகர்கள், ரோமானிய தங்கத்தை இந்தியாவிற்கு கொண்டு வந்து குவித்தனர்.

* இரண்டாம் சந்திர குப்தர் வெளியிட்ட பல்வகை தங்க நாணயங்கள் குப்தப் பேரரசின் செல்வச் செழிப்புக்கு அடையாளமாகும்.

வங்காளம் - அழகான பருத்தி ஆடைகள்

பீகார் - அவுரிச்சாயம்

பனராஸ் - பட்டு

இமயம் - சந்தனம், நறுமணப் பொருள்

தென்னிந்தியா - வாசனைத் திரவியம்

Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info

## இரண்டாம் சந்திர குப்தரின் ஆட்சி எல்லைகள் :

மேற்கு - மாளவம், குஜராத், கத்தியவார்.

வட மேற்கு - பாக்டீரியா வரை

கிழக்கு - வங்காளம்

தெற்கு - நர்மதை நதி வரை.

* இரண்டாம் சந்திர குப்தரின் ஆட்சிக் காலத்தில் புகழ் வாய்ந்த சீனப் பயணி பாஹியான் , இந்தியாவிற்கு வருகை புரிந்தார். இந்தியாவில் பாஹியான் தங்கியிருந்த 9 ஆண்டுகளில் குப்தப் பேரரசில் மட்டுமே 6 ஆண்டுகள் கழித்தார்.

* கோட்டான், காஷ்கர், காந்தாரம். பஞ்சாப் என்று பாஹியான் நில வழியாகவே இந்தியாவிற்கு வந்தார். பெஷாவர், காசி, புத்தகயா, உள்ளிட்ட பல இடங்களுக்கும் அவர் சென்றார். இலங்கை, ஜாவா, வழியாக கடற்பயணமாக அவர் சீனா திரும்பினார்.

 * புத்தர் பிறந்து வாழ்ந்த இடத்தை தரிசித்து புத்த சமய சுவடிகளை சேகரித்து எடுத்து செல்லும் நோக்கத்துடனே , பாஹியான் இந்தியாவிற்கு வந்தார். பாடலிபுரத்தில் தங்கினார்.

 * பாஹியான் கங்கைச் சமவெளியை " பிராமணர்களின் பூமி " என்று குறிப்பிட்டுள்ளார்.

 * பாஹியான், இரண்டாம் சந்திர குப்தரின் பெயரை குறிப்பிடவில்லை. அரசியல் விவகாரங்களில் அவர் அதிக அக்கறை காட்டவில்லை. அவரது முதன்மை நோக்கம் புத்த சமயத்தைப் பற்றியதேயாகும்.

**Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## இரண்டாம் சந்திர குப்தர் பற்றிய மதிப்பீடு :

 * இரண்டாம் சந்திர குப்தர் தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றாலான பல்வகைப்பட்ட நாணயங்களை வெளியிட்டுள்ளார்.

 * புகழ்மிக்க " நவரத்தினங்கள்" இரண்டாம் சந்திர குப்தரின் அவையை அலங்கரித்தனர். அவர்களில் முதன்மையானவர் காளிதாசர் .

காளிதாசர் - சாகுந்தலம் [ வட மொழி காவியம் ]. சாகுந்தலம் உலகின் தலைசிறந்த 100 புத்தகங்களில் ஒன்று.

## காளிதாசர் இயற்றிய நூல்கள் :

[1] சாகுந்தலம் [ வட மொழி காவியம் ]

[2] மாளவிகாக்னிமித்ரம் - விக்ரமூர்வசியம் [ ஆகிய 2 நாடகங்கள் ]

[3] ரகுவம்சம் , குமாரவம்சம் - [ 2 காப்பியங்கள் ]

[4] ரிது சம்ஹாரம் , மேகதூதம் - [ 2 கவிதை நூல்கள் ]

## விசாகதத்தர் இயற்றிய நூல்கள் :

[1] முத்ராராட்சசம் , தேவி சந்திரகுப்தம் [ 2 நாடகங்கள் ]

* தன்வந்திரி இரண்டாம் சந்திர குப்தரின் அரசவையில் ஆலோசகராக இருந்தார்.

* இக்காலத்தில் கலைகள், பண்பாட்டு வளர்ச்சி மூலமாக தான் குப்தர் காலம் பொற்காலம் என்றழைக்கப்படுகிறது.

## இரண்டாம் சந்திர குப்தரின் பின் தோன்றல்கள் :

* இரண்டாம் சந்திர குப்தருக்குப் பின் அவரது மகன் குமார குப்தர் ஆட்சிக்கு வந்தார்.

Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info

## 6.குமார குப்தர் [ 415 - 455 ]:

* குமார குப்தர் ஏராளமான நாணயங்களை வெளியிட்டார். இவரது கல்வெட்டுக்களை குப்தப் பேரரசு முழுவதும் காணலாம்.

* குமார குப்தர் குதிரை வேள்வியும் மேற்கொண்டார்.

* குமார குப்தர் நாளந்தா பல்கலைக்கழகத்தை நிறுவினார்.

* புஷ்யமித்திரர்களால் குப்தப்படை முறியடிக்கப்பட்டது.

## 7.ஸ்கந்த குப்தர் [ 456 - 468 ]:

* ஸ்கந்த குப்தர் தான் ஹூணர்களை முறியடித்து குப்தப் பேரரசை கைப்பற்றினார். இந்தப் போரினால் குப்தப் பேரரசின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

* இறுதியில், ஹூணர்களின் படையெடுப்புகளின் விளைவாக குப்தப் பேரரசு மறைந்தது. பின்னர், மாளவத்தின் யசோதவர்மன் எழுச்சி பெற்றான்.

Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info

## குமார குப்தருக்குப் பின் ஆட்சி புரிந்தவர்கள் :

8. புரு குப்தர}
9. புத்த குப்தர்
10. பாலாதித்யர்

## குப்தர் ஆட்சி முறை :

* பரம பட்டாரகா, மகாராஜாதி ராஜா, பரமேஸ்வரா, சாம்ராட், சக்ரவர்த்தி போன்ற விருதுப் பெயர்களை குப்தப் பேரரசர்கள் சூட்டிக் கொண்டனர்.

* குப்தர் கால கல்வெட்டுகள் சண்டிவிக்ரகன் என்ற உயர் அதிகாரி பற்றி கூறுகிறது. அயலுறவுத் துறை அதிகாரியாக அவர் இருந்திருக்கக் கூடும்.

* குமாரமத்யர்கள் , அயுக்தர்கள் போன்ற அதிகார வர்க்கம் மூலமாக அரசர் மாகாண ஆட்சித்துறையோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்.

* குப்தப் பேரரசின் மாகாணங்கள் " புக்திகள் " எனப்பட்டன.

* ஆளுநர்கள் - உபரிகர்கள் [ ஆளுநர்கள் இளவரசர்களாகவே இருந்தனர்.]

* மாவட்ட ஆட்சித் தலைவர் - விஷயபதி

* நகர நிர்வாகம் - நகர சிரேஷ்டிகள்

* கிராம நிர்வாகம் - கிராமிகர்கள்

* கிராமம் ---> நகரம் ---> மாவட்டம் --->விஷயங்கள் ---> புக்திகள்.

* குப்தர் ஆட்சி கருணை மிக்கதாக இருந்தது. ஒவ்வொருவரும் தனிப்பட்ட சுதந்திரத்தை அனுபவிக்க முடிந்தது. அபராதம் விதிப்பதே பொதுவான தண்டனை. ஒற்றர் முறை இல்லை. மௌரியர் ஆட்சி முறையை விட குப்தர் ஆட்சி மிகவும் சுதந்திரமாக காணப்பட்டது.

**Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## குப்தர்கள் சமூக வாழ்க்கை :

* குப்தர் காலத்தில் ஜாதிமுறை கடுமையாக பின்பற்றப்பட்டது.

* தீண்டாமை வழக்கம் குப்தர்கள் காலத்தில் மெல்ல வளரத் தொடங்கியது. சண்டாளர்கள் சமுதாயத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டதாக பாஹியான் கூறியுள்ளார்.

* மகளிர் நிலைமை மோசமடைந்தது. சமய நூல்கள் படிப்பதற்கு அனுமதி இல்லை. " சுயம்வரம் " கைவிடப்பட்டது. மனுஸ்மிரிதி, பெண்களுக்கு சிறுவயதிலேயே திருமணம் செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்தது.

* பிராமண சமயம் செல்வாக்கு பெற்றது.பிராமண சமயம் 2 வகை. [1] வைணவம் [2] சைவம் .

* பெரும்பாலான குப்த அரசர்கள் வைணவர்களாக இருந்தனர்.

* இராமாயணம் , மகாபாரதம், 18 புராணங்கள் குப்தர் காலத்தில் தான் தொகுக்கப்பட்டன. அதாவது இறுதி வடிவம் பெற்றன. பஞ்சதந்திரக் கதைகள் இயற்றப்பட்டன.

* பிராமண சமயத்தின் எழுச்சியினால் புத்த சமயமும், சமண சமயமும் வீழ்ச்சியடைந்தது. ஆனால், வசுபந்து போன்ற புத்த அறிஞர்கள் ஆதரிக்கப்பட்டனர். மேற்கு மற்றும் தென் இந்தியாவில் சமண சமயம் செழித்து வளர்ந்தது. இக்காலத்தில் தான் வாலாபியில் முதல் சமண சமய மாநாடு கூட்டப்பட்டது. சுவேதாம்பரர்களின் சமண விதிகள் எழுதப்பட்டன.

* குப்தர் காலத்தில் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சியை இந்திய அறிவுசால் நடவடிக்கைகளின் உச்சகட்டம் எனலாம்.

**Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## குப்தர் கால கலை மற்றும் கட்டிடக்கலை:

* நாகரி, மற்றும் திராவிடக் கலைப்பாணிகள் இரண்டும் குப்தர் காலத்தில் வளர்ச்சி பெற்றன. ஆனால், குப்தர்கள் காலத்திய கலைச் சின்னங்களின் பெரும்பகுதி ஹூணர்கள் போன்ற அந்நியப் படையெடுப்புகளால் அழிக்கப்பட்டுவிட்டன.

[1] ஜான்சிக்கு அருகில் உள்ள தியோகார் கோவில்.

[2] அலகாபாத்துக்கு அருகிலுள்ள கார்வாஸ் ஆலயம்.

[3] மதுராவிலுள்ள நிற்கும் வடிவிலுள்ள புத்தர் சிலை. [ இவற்றில் கிரேக்க சாயல் உள்ளது ]

[4] சாரநாத் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலை

[5] ஸ்கந்த குப்தரின் பிடாரி ஒற்றைக் கல் தூண்

## * குப்தர் காலத்தில் உலோகவியல் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது.

[1] தற்போது பர்மிங்ஹாம் அருங்காட்சியகத்தில் உள்ள, சுல்தான் கஞ்ச் என்ற இடத்தில் முதலில் கண்டெடுக்கப்பட்ட செம்பாலான புத்தர் சிலை. 7.5 அடி உயரம் மற்றும் ஒரு டன் எடை உள்ளது.

[2] மெஹ்ரலி இரும்புத்தூண்

Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info

## குப்தர்கால ஓவியங்கள் :

[1] குவாலியருக்கு அருகிலுள்ள பாக் குகைகளில் காணலாம்.

[2] அஜந்தா சுவரோவியங்கள் ஜாதகக் கதைகளில் கூறப்பட்டுள்ளது. [ புத்தரின் வாழ்க்கையை சித்தரிக்கின்றன. ]

[3] இலங்கையிலுள்ள சிகிரியா ஓவியங்கள், அஜந்தா ஓவியங்களின் தாக்கத்தை பிரதிபலிக்கின்றன.

## குப்தர் கால இலக்கியம் :

* வடமொழி [ சமஸ்கிருதம் ] குப்தர் காலத்தில் ஆட்சி மொழியாயிற்று.

* பிரம்மி வரி வடிவத்திலிருந்து , நாகரி வரிவடிவம் வளர்ச்சி பெற்றது.

* வடமொழி இலக்கியங்களிலேயே மிகச் சிறந்தவை குப்தர் காலத்தைச் சார்ந்தவையாகும்.

* குப்தர் காலத்தில் புகழ் வாய்ந்த கவிஞர் " சூத்ரகர் ". இவர் எழுதிய மிருச்ச கடிகம் நகைச்சுவைக்கும் , சோகத்திற்கும் பெயர் பெற்றது.

* அர்ச்சுனனுக்கும் , சிவபெருமானுக்கும் இடையே நடைபெற்ற மோதலைக் கூறும் கதை ----> கிருதார்ஜூன்யம். இந்த நூலைப் படைத்தவர் பாரவி.

* தண்டின் ----> [1] காவிய தரிசனம்

[2] தசகுமாரசரிதம்

* சுபந்து ----> வாசவதத்தை.

* குப்தர் காலத்தில் தான் பஞ்சதந்திரக் கதைகள் விஷ்ணு சர்மா என்பவரால் தொகுக்கப்பட்டன.

* அமரசிம்ஹர் என்ற புத்த சமய அறிஞர் அமரகோசம் என்ற அகராதியைப் படைத்தார்.

* தற்போது காணப்படும் புராணங்கள் குப்தர்கள் காலத்தில் தொகுக்கப்பட்டதாகும். அவற்றில் குறிப்பிடத்தக்கவை :

[1] பாகவத புராணம்

[2] விஷ்ணு புராணம்

[3] வாயு புராணம்

[4] மத்சய புராணம்

**Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## குப்தர் கால அறிவியல் :

* கணிதம், வான இயல், ஜோதிடம், மருத்துவம் போன்ற துறைகளில் குப்தர் காலத்தில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டது.

* ஆரியப்பட்டர் சிறந்த கணித மேதை மற்றும் வான இயல் அறிஞர். கிபி 499 ஆம் ஆண்டு அவர் ஆரியபைட்டியம் என்ற நூலை எழுதினார். அது கணிதம், வானநூல் தொடர்புடையது. சூரியன் மற்றும் சந்திர கிரகணம் ஏற்படுவதை அறிவியல் அடிப்படையில் இந்நூல் விளக்குகிறது. பூமி உருண்டை வடிவிலானது என்றும், அது தன்னைத்தானே சுற்றி வருகிறது என்றும் முதன் முதலில் அறிவித்தவர் ஆரியபட்டர். ஆனால் அக்கருத்துக்களை அவருக்குப்பின் வந்த வராஹமிகிரரும் , பிரம்மகுப்தரும் நிராகரித்தனர். பிற்காலத்தில் இது மெய்பிக்கப்பட்டது.

* வராஹமிகிரர் ஐந்து வகையான இயல் அமைப்புகளை கூறும் பஞ்ச சித்தாந்திகா என்ற நூலை படைத்தார். ஜோதிட கலையில் சிறந்த புலமையுடையவராகவும் அவர்

**திகழ்ந்தார். அவரது படைப்பான பிருகத்சம்கிதை வட மொழி இலக்கியத்தில் சிறந்த நூலாகப் போற்றப்படுகிறது.**

*** வான இயல், ஜோதிடம், புவியியல், கட்டிடக் கலை , வானியல், விலங்குகள், மணமுறைகள், சகுனங்கள் என பல்வேறு தலைப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.**

*** வராஹமிகிரர் எழுதிய பிருகத் ஜாதகம் என்ற நூல் ஜோதிடக் கலைக்கு அடிப்படையாக கருதப்படுகிறது.**

*** மருத்துவத்துறையில் சிறந்த மேதையான வாக்பதர், குப்தர் காலத்தில் வாழ்ந்தவர். பண்டைய இந்தியாவின் மருத்துவ மும்மணிகளில் வாக்பதரும் ஒருவர்.**

**Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## * குப்தர் காலத்திற்கு முன்பு வாழ்ந்த மற்ற இரண்டு அறிஞர்கள் :

**[1] சரகர்.**

**[2] சூஸ்ருதர்**

*** " அஸ்டாங்க சம்கிரஹம் " அல்லது " மருத்துவத்தின் 8 பிரிவுகள் " என்ற நூலை வாக்பதர் எழுதியுள்ளார்.**

**[ வீரசேனர் - வியாகரணம் ]**

**[ சாமண்டகன் - நீதி சாஸ்திரம் ]**

**Tnpsc தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

*** குப்தர்களின் காலம் பொற்காலம் எனப்படுகிறது.**

**[ காரணம் : கலைகள், பண்பாடு வளர்ச்சி மூலமாக குப்தர்களின் காலம் பொற்காலம் எனப்படுகிறது. ]**

**குப்தர்களின் பொருளாதார வாழ்க்கை:**

**நிலம் 5 வகையாகப் பிரிக்கப்பட்டது.**

**[1] ஹிலா**

**[2] ஷேத்ரா பூமி - விவசாய நிலம்**

**[3] வாஸ்து பூமி - வாழ்விடம்**

**[4] சரஹா  பூமி - மேய்ச்சல் நிலம்.**

**[5] அப்ரஹடா [ Aprahata ] - காட்டுப்பகுதி**

**குப்தர்  கால  துறைமுகங்கள் :**

**மேற்கு துறைமுகங்கள் :**

**[1] பரோச்**

**[2] சால்**

**[3] கல்யான்**

**[4] காம்பே**

**கிழக்கு துறைமுகங்கள் :**

**[1] Tamralipta**

**[2] Ghantasala**

**குப்தர் காலத்தில் வரிகள் விதிக்கப்பட்டன : அவையாவன :**

**[1] பாலி: மௌரியர் காலத்தில் மக்களாக ஆர்வம் கொண்டு அரசுக்கு செலுத்திய வரி. குப்தர் காலத்தில் இந்த வரி கட்டாய மாக்கப்பட்டது.**

**பாகா : விவசாயிகளின் சாகுபடி தொடர்பான வரி. அது உற்பத்திகளின் 1 / 6th பகுதியாக இருந்தது.**

**போகா : போகா வரி என்பது பரிசுகள், மலர்கள், பழங்கள் ஆகியவை தொடர்பான வரி.**

**ஹிரண்யா : இந்த ரொக்கமாக வழங்கப்படும் வரி. ஹிரண்யா என்பது தங்கம் என்பதின் பொருள்.**

**Halivakara: உழுநிலம், கலப்பை தொடர்பான வரி.**

**காரா: இது கிராம இருந்து வசூலிக்கப்படும் சில ஒழுங்கற்ற வரி இருந்திருக்கலாம்.**

**Shulka: சுங்க வரி.**

**Udinanga: இந்த  வரி ஒரு சமூக பாதுகாப்பு வகையான இருக்கலாம்.**

**Klipta: இது விற்பனை மற்றும் நிலங்கள் கொள்முதல் தொடர்பான வரி.**

**மருத்துவ மும்மணிகள் :**

**[1] சரகர்**

**[2] சுஸ்ருதர்**

**[3] வாக்பதர்**

**காளிதாசர் நூல்கள் :**

*** நாடகம் : சாகுந்தலம், விக்ரமோர் வசியம், மாலவிகாக்னிமித்ரம்,**

*** காப்பியம் : ரகுவம்சம், குமாரசம்பவம்,**

*** கவிதை நூல் : மேகதூதம், ரிதுசம்ஹாரம், முதலிய நூல்களை மகாகவி காளிதாசர் எழுதினார்.**